மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு சிட்கோ மூலமாக உதவி செய்வது என்பது இயலாதது. இது சிட்கோ சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும் முக்கியத் துணைக் கேள்வியாக இருக்கிற காரணத்தினாலே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினரே பொறுப்பேற்று கூட்டுறவு தொழில் முனைவர்கள் சங்கம் என்கிற அடிப்படையிலே அவர்கள் அமைத்துக் கொடுப்பார்களேயானால் அந்தக் கூட்டுறவு தொழில் முனைவர்கள் சங்கத்தின் மூலமாக எல்லா உதவிகளையும் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 511, திரு. கே. முனிவெங்கடப்பன் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

511—

போச்சம்பள்ளியில் சூரியகாந்தி எண்ணெயை டின்களில் நிரப்புதல்

*** 36330** - *திரு. கே. முனிவெங்கடப்பன்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளியில் உற்பத்தி செய்யப்படும் சூரியகாந்தி எண்ணெயை சென்னையில் டின்களில் நிரப்புவதற்குப் பதிலாக போச்சம்பள்ளியிலேயே நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) 9-12-94 முதல் போச்சம்பள்ளியிலேயே சூரியகாந்தி எண்ணெய் டின்களில் நிரப்பப்படுகிறது.

முற்பகல் 10-15

திரு. வி. கே. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று தமிழ்நாட்டிலே எத்தனை இடங்களிலே சூரியகாந்தி எண்ணெய்

டின்களிலே நிரப்பி அனுப்பப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா; தற்சமயம் இலாபகரமான தொழிலாக அது இருக்கிறதா? இதுபோன்று வேறு இடங்களிலே துவங்குவதற்கான நடவடிக்கை உள்ளதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளியில் சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் ஆலை ஒன்று நிறுவப்பட்டது. அந்த ஆலையினுடைய அறவைத் திறனுக்கு முழுமையாக அன்றைக்கு சூரியகாந்தி விதை கிடைக்கவில்லை. எனவே, பிற மாநிலங்களிலிருந்து விலைக்குவாங்கி கொடுத்து, அங்கே அவர்கள் எண்ணெய் பிழிந்தெடுத்தார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், கடந்த ஆண்டு அந்த ஆலையினுடைய முழு அறவைத் திறனுக்கு ஏற்ற அளவு தமிழகத்திலேயே விதை உற்பத்தி செய்யப்பட்டது. இன்றைக்கு சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலை இன்று மூன்று தனியார் நிறுவனங்கள் நடத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்கள், நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்ற எண்ணெய்களைத்தான் சமையலுக்குப் பயன்படுத்துகின்றார்கள். சூரியகாந்தி எண்ணெயைப் பயன்படுத்துவது கிடையாது. ஆகவே, அதைச் சத்துணவு மையங்களிலாவது சமையலுக்குப் பயன்படுத்த முடியுமா? அதற்கு அரசு ஆவன செய்யுமா? அதுமட்டுமல்ல, வடநாட்டில் கடுகு எண்ணெயை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். தமிழ்நாட்டிலும் கடுகு எண்ணெயை உபயோகப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா? அந்த கடுகு எண்ணெய் வாடை மோசமாக இருப்பதால், சாப்பிட முடியவில்லை. கடுகு எண்ணெய் ஆனாலும் சரி, சூரியகாந்தி எண்ணெய் ஆனாலும் சரி, அந்த வாடை இல்லாத அளவிலே நல்ல ஸ்மெல்லாக வைத்து, விற்பனைக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உற்பத்தி செய்யக்கூடிய சூரியகாந்தி எண்ணெய் 'சனோலா' என்ற பெயரிலே இன்றைக்கு டெல்லி, பம்பாய் போன்ற

மாநிலங்களுக்கெல்லாம் விற்பனைக்குப் போய்க் கொண்டிக்கிறது. அதேபோன்று, கடுகிலிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஒன்றும் இல்லை. தனியார்கள் முன்வருவார்களேயானால் அரசு அவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்யும். எனவே, கடுகிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயிலிருந்து வரக்கூடிய வாடையை நீக்கி, சுத்திகரிப்பதற்குத் தொழில்நுட்பங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் போச்சம்பள்ளியில் உற்பத்தி செய்யப்படுகின்ற சூரியகாந்தி எண்ணெயைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் விற்பனை செய்ய முன்வருவார்கள் என்று சொன்னால் அரசு வேளாண்மைத் துறை ஆலோசனை வழங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, போச்சம்பள்ளியில் சூரியகாந்தி எண்ணெய் பிழிந்து எடுக்கும் அந்த ஆலையில் முதலில் அங்கே பிழிந்தெடுக்கப்பட்ட எண்ணெய் அங்கேயே பேக்கிங் செய்யப்படாததால் வேலைவாய்ப்பு சரிவரக் கிடைக்கவில்லை என்பது அந்த மக்களுடைய கோரிக்கையாக இருந்தது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கேயே பேக்கிங் செய்யப்படுகிறது என்று கூறினார்கள். அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற எண்ணெய் முழுவதும் பேக்கிங் செய்யப்படுகின்றனவா? அப்படியானால் அந்தப் பகுதியில் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை 1979-ல் ஆரம்பிக்கப்பட்டது. அன்றைக்கு இந்த எண்ணெய்க்கு அவ்வளவு வரவேற்பு தமிழகத்திலே எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. எனவேதான் சென்னை போன்ற நகரத்திலே விற்பனை செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே சென்னைக்குக் கொண்டுவந்து, டின்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. இன்றைக்கு, திரைப்படங்கள், பத்திரிகைகள் போன்றவற்றின் மூலம் விளம்பரம் செய்ததற்குப் பின்னாலே

நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. எனவே, இன்றைக்கு போச்சம்பள்ளியிலே இருந்து டின்களில் அடைத்து விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. இன்னும் குறிப்பாக, பின்தங்கிய மாவட்டம், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்கு இந்த நடவடிக்கையால் வேலை வாய்ப்பு கிடைத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

முற்பகல் 10-20

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நம் முன்னோர்களெல்லாம் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆகியவற்றை உபயோகித்திருக் கிறார்கள், இப்பொழுதுதான் சனோலா எண்ணெய் வந்திருக்கிறது. இதில் அப்படி என்ன உயர்ந்த குணம் இருக்கிறது? மேலும், போச்சம்பள்ளியில் இருந்து அழகான புடவை தயாராகி வருகின்றது. அதுவும் இந்த ஊர்தானா? ஆக இந்த இரண்டையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புடவை பற்றி கைத்தறித்துறை அமைச்சரிடம் கேளுங்கள், இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னோர்களெல்லாம் பல்வேறு எண்ணெய்களை உபயோகித்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் ஆமணக்கெண்ணெய், இலுப்பை எண்ணெய், வேப்பெண்ணெய் ஆகிய இவைகளையெல்லாம்கூட பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நாகரீகம் வளர வளர வாசனை எண்ணெய்களை உபயோகப்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த சனோலா எண்ணெயில் கொலஸ்டிரால் இல்லை. எனவே மக்கள் இதை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் இதன் சிறப்பை எடுத்துச் சொல்லி மக்கள் இதை மேலும் அதிகமாக உபயோகப்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கினால் இதற்கு நல்ல கிராக்கி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் இந்த

சூரியகாந்தி எண்ணெயை, அதாவது சைனோலா எண்ணெயைப் பற்றிச் சொன்னார்கள். இதில் மூன்று நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதாகவும் சொன்னார்கள். இந்த மூன்று நிறுவனங்கள் என்னென்ன என்பதைப் பற்றிச் சொல்ல முடியுமா? அவற்றில் ஒன்று ஐ.டி.ஸி. என்று தெரிகிறது. இந்த சூரியகாந்தி செடி சூரிய வெப்பத்தில் பயிராகக்கூடிய ஒரு செடி. இதில் கொலஸ்ட்டிராலைக் கட்டுப்படுத்தக்கூடிய எண்ணெய் தயாராகின்றது. இதை மக்கள் அதிகமாக விரும்பி உபயோகிப்பதாலும் நமது மாநிலத்தில் சூரிய வெப்பம் அதிகமாக இருப்பதால் இந்தச் செடியை அதிக அளவில் பயிர் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று நிறுவனங்கள் என்பது, ஐ.டி.ஸி., பொள்ளாச்சி மகாலிங்கம் கம்பெனி மற்றும் ஒரு தனியார் நிறுவனம் என்பது மட்டும் எனக்குத் தெரியும். இன்றைக்கு சூரியகாந்தி பயிரிடப்படும் பயிர்களின் பரப்பு நமது புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் விரிவடைந்திருக்கிறது என்பதை ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். இதற்கு முன்பு இந்த முழு அளவு திறன் கொண்ட விதைகள் தமிழ்நாட்டில் கிடைக்காத சூழ்நிலை இருந்தது. அப்போது பிற மாநிலங்களில்தான் வாங்கிக் கொண்டிருந்தோம். ஆனால் தற்போது நாம் தனித்தன்மை பெற்றிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் ஒட்டு விதைகள் (hybrid seeds) இதை மினிக்கட்டு மூலமாக ப்ரடூஸ் செய்ய கொடுத்து இருக்கிறோம். எனவே அதனுடைய பரப்பு உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 512, திரு. கா. பூ. முனுசாமி, இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர்.

512—

மினரல் வாட்டருக்கு விற்பனை வரி

*** 25063** - திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—